வகுப்பு : 11

தேர்வு எண்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | | |

# முதல் திருப்புதல் தேர்வு , ஜனவரி – 2025

நேரம் : 3.00 மணி]

## பொருளியல்

[மொத்த மதிப்பெண்கள் : 90

பகுதி – I

20X1=20

குறிப்பு : i) அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்

(ii) கொடுக்கப்பட்டுள்ள மாற்று விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையைத் தேர்ந்தெடுத்து குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதுக.

1. வளர்ச்சி இலக்கணம் என்பது யாது?
   அ) இயங்க நிலை பொருளாதார கட்டமைப்பில் தேர்ந்தெடுப்பதில் உள்ள பிரச்சனை
   ஆ) எண்ணற்ற வளங்களும் மற்றும் விருப்பங்களுக்கான பிரச்சனைகளும் ஆகும்
   இ) செல்வத்தை உற்பத்தி செய்வது மற்றும் பகிர்வது ஈ) மனிதர்களின் பல பொருள் சார்ந்த நலன்
2. சாதாரண தரவரிசை பயன்பாட்டை எவ்வாறு அளவிடலாம்?
   அ) தரப்படுத்துதல் ஆ) எண்ணிக்கை படுத்துதல்
   இ) வார்த்தை படுத்துதல் ஈ) ஏதுமில்லை
3. குறுகிய கால உற்பத்திச் சார்பு எதன் மூலம் அறியப்படுகிறது?
   அ) விகித அளவு விளைவு விதி ஆ) மாறும் விகித அளவு விளைவு விதி
   இ) சம அளவு உற்பத்தி கோடு ஈ) தேவை விதி
4. பொருட்களின் விற்பனை மூலம் கிடைக்கும் வருமானம் ------ வருவாயாகும்.
   அ) லாபம் ஆ) மொத்த இ) சராசரி ஈ) இறுதிநிலை
5. எந்த வகை அங்காடியில் போட்டியே இராது?
   அ) நிறைவுப் போட்டி ஆ) முற்றுரிமை
   இ) முற்றுரிமை போட்டி ஈ) சில்லோர் முற்றுரிமை
6. ஓர் உற்பத்தியாளர் உழைப்பாளியின் பணியை பெற ஒப்பந்தம் செய்து குறிப்பிட்ட தொகையை வழங்குவது கூலியாகும் எனக் கூறியவர்
   அ) பென்ஹாம் ஆ) ஜே எஸ் மில் இ) ஜே எம் கேன்ஸ் ஈ) வாக்கர்
7. பொருளியலில் வருமான பகிர்வு எதனுடன் தொடர்புடையது?
   அ) உற்பத்திக் காரணிகள் ஆ) தனிநபர் இ) நிறுவனங்கள் ஈ) வணிகர்கள்
8. மக்கள் தொகையின் இயல்புகளைப் பற்றி அறிவியல் ரீதியான ஆய்வு
   அ) இட அமைப்பியல் ஆ) மக்கள் தொகை இயல் இ) புவியியல் ஈ) தத்துவவியல்
9. வலுவான பொருளாதாரங்களைக் கொண்ட நாடுகள் வரிசையில் இந்தியாவின் இடம்
   அ) நான்கு ஆ) ஏழு இ) ஐந்து ஈ) பத்து
10. இந்தியாவின் கள்ளிக்கோட்டைக்கு வாஸ்கோடகாமா வருகை புரிந்த வருடம்
    அ) 1498 ஆ) 1948 இ) 1489 ஈ) 1849
11. 1614 இல் தாமஸ்ரோ யாரிடம் அனுமதி பெறுவதில் வெற்றி பெற்றார்?
    அ) அக்பர் ஆ) ஷாஜகான் இ) ஜஹாங்கீர் ஈ) நூர்ஜகான்
12. கீழ்க்கண்டவற்றுள் எது தனியார்மயமாதலை குறிக்கும்.
    அ) முதலீட்டை திரும்ப பெறுதல் ஆ) தேசிய மயம் நீக்குதல்
    இ) தொடர் நிறுவனமயமாக்கல் ஈ) இவை அனைத்தும்
13. புதிய பொருளாதாரக் கொள்கை கீழ் கண்டவற்றுள் எதனை உள்ளடக்கியது?
    அ) வெளிநாட்டு முதலீடு ஆ) வெளிநாட்டு தொழில்நுட்பம்
    இ) வெளிநாட்டு வர்த்தகம் ஈ) இவை அனைத்தும்
14. மெட்ராஸ் பல்கலைக்கழகத்தின் முதல் பொருளாதார பேராசிரியர் யார்?
    அ) கில்பெர்ட் ஸ்லெட்டர் ஆ) மோரிஸ் இ) லிட்டில் ஸ்டுவர்ட் ஈ) அலெக்சாண்டர்
15. ஊரகப் பொருளாதாரத்தின் முக்கிய இயல்பு
    அ) வேளாண்மையைச் சார்ந்திருத்தல் ஆ) அதிக மக்கள் தொகை அடர்த்தி
    இ) குறைந்த அளவு மக்கள் தொகை ஈ) ஏற்றத்தாழ்வு குறைவு
16. எது ஊரகப்பகுதியை கண்டறியும் பண்பு
    அ) குறைந்த மக்கள் தொகை அடர்த்தி ஆ) அதிக மக்கள் தொகை அடர்த்தி
    இ) குறைந்த இயற்கை வளம் ஈ) குறைந்த மனித வளம்

Scanned with CamScanner

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



17. எழுத்தறிவிதத்தில் தமிழ்நாட்டின் தரம்
அ) 2 ஆ) 4 இ) 6 ஈ) 8

18. தமிழ்நாடு எதில் வளமானது?
அ) வன வளம் ஆ) மனித வளம்
இ) கனிம வளம் ஈ) மேற்கூறிய அனைத்தும்

19. ஒரு சாதாரண மாறி உடன் கூடிய சார்பு
அ) பல மாறிச் சார்பு ஆ) இரு மாறிச் சார்பு இ) ஒரு மாதிரி சார்பு ஈ) பல்லுறுப்பு சார்பு

20. இரு அளவுகளுக்கு இடையே சமநிலை என்ற சொற்றொடர் குறிப்பது
அ) சமமின்மையை ஆ) சமநிலை இ) சமன்பாட்டை ஈ) சார்பை

## பகுதி – II

குறிப்பு : i) ஏதேனும் 7 வினாக்களுக்கு விடையளிக்கவும். 7x2=14
ii) வினா எண்.30க்கு கண்டிப்பாக விடையளிக்கவும்.

21. இயல்புரை அறிவியலின் இலக்கணத்தை வரையறுக்க.
22. விலைத்தேவை நெகிழ்ச்சியின் அளவை விவரி.
23. வருவாயை வரையறு.
24. விலைபேதம் காட்டுதலின் இரண்டு தன்மைகளை கூறுக.
25. பகிர்வு என்றால் என்ன?
26. சுதந்திரம் அடைவதற்கு முன் இந்தியாவில் காணப்பட்ட பல்வேறு வகையான நில உடைமை முறைகள் யாவை?
27. சிறப்புப் பொருளாதார மண்டலம் என்பதன் பொருள் என்ன?
28. ஊரக வீட்டுவசதி பிரச்சனைக்கான காரணங்களில் ஏதேனும் இரண்டு கூறுக.
29. அளிப்புச் சார்பு கொடுக்கப்பட்டுள்ளபோது அளிப்பு நெகிழ்ச்சிக்கெழு காண சூத்திரம் என்ன?
30. உற்பத்தியாளர் சமநிலையை அடைய நிபந்தனை யாது?

## பகுதி – III

குறிப்பு : i) ஏதேனும் 7 வினாக்களுக்கு விடையளிக்கவும். 7x3=21
ii) வினா எண்.40க்கு கண்டிப்பாக விடையளிக்கவும்.

31. பயன்பாட்டின் முக்கிய இயல்புகள் யாவை?
32. நுகர்வோர் சமநிலை என்ற கருத்தை சுருக்கமாக விவரி.
33. காப் டக்ளஸ் உற்பத்திச் சார்பை விளக்குக.
34. நீண்டகால செலவு மலைக்கோட்டை தக்க வரைபடத்துடன் விளக்குக.
35. நிறுவனம் மற்றும் தொழிற்சாலைக்கு இடையே உள்ள வேறுபாடுகள் யாவை?
36. புத்தாக்க லாபக் கோட்பாட்டை சுருக்கமாக கூறுக.
37. பொருளாதார முன்னேற்றம் வரையறு.
38. ஊரக வேலையின்மையை நீக்குவதற்கான வழிமுறைகளை கூறுக.
39. தமிழ்நாட்டின் கனிம வளங்கள் குறிப்பு வரைக.
40. MS Excel sheet செயல்படுவதில் உள்ள நிலைகளை விளக்குக.

## பகுதி – IV

குறிப்பு : i) அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். 7x5=35

41. (அ) பொருளியலைப் பற்றிய பல்வேறு இலக்கணங்களை ஒப்பிட்டு வேறுபடுத்துக. (அல்லது)
(ஆ) பொருளாதார முன்னேற்ற கருத்துகளில் ஜவஹார்லால் நேருவின் பங்கை வெளிக் கொணர்க.
42. (அ) தேவை விதி மற்றும் அதன் விதி விலக்குகளை விவரி. (அல்லது)
(ஆ) பொருளாதார முன்னேற்றத்தில் சிறு தொழில் நிறுவனங்களின் பங்கினை விவரி.
43. (அ) விகித அளவு விளைவு விதியை உதாரணத்துடன் விளக்குக. (அல்லது)
(ஆ) 2015–2020 ஆண்டிற்கான ஏற்றுமதி – இறக்குமதி கொள்கையின் சிறப்பியல்புகளை விளக்குக.
44. (அ) பல்வேறுப்பட்ட விலை நிலைகளில் AR மற்றும் MR கோடுகளுக்கிடையேயான தொடர்பை விளக்குக.
(அல்லது)
(ஆ) ஊரக பொருளாதாரத்தின் பண்புகள் விசித்திரமானவை – விவாதி.
45. (அ) நிறைவுப்போட்டின் இயல்புகளை விளக்குக. (அல்லது)
(ஆ) மக்கள் தொகையின் தரமான அம்சங்களை விவரி.
46. (அ) ரிக்கார்டோவின் வாரக் கோட்பாட்டை எடுத்துக்காட்டுடன் விவரி. (அல்லது)
(ஆ) பொருளியல் துறையில் தகவல் தொழில் நுட்பங்கள் எவ்வாறு பயன்படுத்தப்படுகின்றன.
47. (அ) சம இறுதிநிலை பயன்பாட்டு விதியை விளக்குக. (அல்லது)
(ஆ) இந்திய 12th ஐந்தாண்டுத்தின் திட்டங்களின் செயல்பாடுகளை விவரி.

Scanned with CamScanner
Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com